மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை

E.A 3/19

IN

E.P. 10/19

எ.ம.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: சிவசுப்பிரமணியன்
வயது :
கிராமம் :

தேதி : 21.08.25
த/பெ :தங்கவேல் நாடார்
தொழில் :
மாவட்டம்:

---

**21.08.25 குறுக்கு விசாரணை**

1. என் தந்தை 1997 ல் இறந்தார். அசல் வழக்கு எண் 20/2010 ல் என் தந்தை 18.02.2005 ல் இறந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ 20 ல் என் தந்தை 18.02.2005 ல் இறந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. நான் 2004 ல் அசல் வழக்கு எண் 20/2004 என்ற பாகப்பிரினை வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆம். அவ்வழக்கில் தாவா சொத்து என் தந்தைக்கு கிரையம் மற்றும் பூர்விகமாக பாத்தியப்பட்டதாக அறிவிப்பு அனுப்பி இருந்ததாக சொல்லியிருந்தேன் என்றால் ஆம்.

2. என்னுடைய தற்போதைய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து நாராயணநாடாருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். இந்நீதிமன்றத்தில் மொத்தம் 3 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்குகளின் எண்கள் அசல் வழக்கு எண் 20/2004, 20/2010, 156/2017 என்றால் ஆம். மூன்று வழக்குகளிலும் நாராயண நாடாருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டதாக

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.21 19:50:43 +0530

சொல்லவில்லை என்றால் நாராயண நாடார் வழியாக பூர்விக பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன். இம்மனுவில் ஒரு உயில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம். அந்த உயில் என் அப்பாவுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாகும். என்னிடம் காண்பிக்கப்படும் எ.ம.சா.ஆ 2 உயில் என் தாத்தா என் பெரியப்பா அருணாச்சல நாடார், என் அப்பா தங்கவேல் நாடார், என் சித்தப்பா துரையப்பா நாடார், என் தாத்தா அபிமான புத்திரர் துரைப்பாண்டி நாடார் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்துள்ளார். வேறு யாருக்கும் உயில் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி உயில் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

3. எ.ம.சா.ஆ 2 உயில் மொத்தம் 6 பேருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ 12 நன்கொடை ஆவணத்தில் உயில் ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நாராயண நாடார் எழுதிய உயிலை ஒரு போதும் ரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. துரைப்பாண்டி நாடார் என் தாத்தாவின் அபிமான புத்திரர் ஆவார். துரைப்பாண்டி நாடாருக்கு அவரது தந்தை ஞானமுத்து நாடார் எந்த சொத்தும் எழுதி வைக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தில் ஒரு மின்இணைப்பு மட்டும் தான் தற்போது உள்ளது. இரண்டு மின்இணைப்புகள் இருந்தன. ஒரு மின்இணைப்பு மராமத்து வேலைக்காக துண்டிக்கப்பட்டுவிட்டது. மின் இணைப்பு எண் எனக்கு ஞாபகம் இல்லை. துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு யார் பெயரில் இருந்தது என்று ஞாபகம் இல்லை. துண்டிக்கப்பட்ட மின்இணைப்பு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 1962ம் ஆண்டு மின்சாரம் வந்த காலத்தில் கொடுக்கப்பட்டது. துண்டிக்கப்பட்ட மின்இணைப்பு நான்தான் கட்டணம் செலுத்தி வந்தேன்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.21 19:50:48 +0530

மின்இணைப்பை துண்டிக்க நான்தான் மனு கொடுத்தேன். மனுதாரரின் தாயார் பெயரில் புல எண் 48/5 B க்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது மோசடியானதாகும். அது மோசடியானது என்று வழக்கு போட்ட பிறகுதான் தெரியும். பட்டாவினை ரத்து செய்ய வழக்கு போடவில்லையா என்றால் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன். அந்த மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். வட்டாட்சியரின் உத்தரவை தாக்கல் செய்துள்ளேன்.

5. மனுதாரரின் தாயார் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்துப்பார்த்துள்ளேன். அது மோசடியானதாகும். அதில் 3 வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. 3 வீடுகளும் 300 சதுர மீட்டர் இருக்குமா என்றால் அதற்கும் கூடுதலாக இருக்கும். நான் நிறைவேற்று மனுவை 12 செண்டுக்கும் 3 வீட்டுக்கும் போட்டுள்ளேன். என் வீட்டின் 1 செண்ட் மதிப்பு சுமார் 50000 ஆயிரம் இருக்கும். ஏற்பாடு ஆவணத்தில் கண்ட சொத்தின் மதிப்பு 15 லட்சம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம்.

6. மனுதாரரின் தாயார் தாவா சொத்தில் உள்ள கதவு எண் 1/168 வீட்டிற்கு எத்தனை வருடம் தீர்வை செலுத்தியுள்ளார் என்றால் நாங்கள் தான் செலுத்தி வருகிறோம். அந்த வீட்டின் தீர்வை ரசீதை ரத்து செய்ய மனு கொடுத்துள்ளேன் என்றால் மோசடியாக ரசீது வாங்கியதால் மனு கொடுத்தேன். அசல் வழக்கு எண் 20/2010 ஐ நாராயணன் மற்றும் ஜெயலெட்சுமி ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம். தூத்துக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 4ல் சிசி நம்பர் 24/2018 நிலுவையில் உள்ளது என்றால் ஆம். அவ்வழக்கில் நாராயணன் மற்றும் ஜெயலெட்சுமி எனது தரப்பு சாட்சிகளாக உள்ளனர் என்றால் ஆம். அவர்கள் மீதுதான்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.21 19:50:52 +0530

அசல் வழக்கு எண் 20/2010 தாக்கல் செய்தேன் என்றால் ஆம். அதில் அவர்கள் தோன்றா தரப்பினர்கள் என்றால் ஆம்.

7. அசல் வழக்கு எண் 20/2004 ல் பூங்கனி நாடாத்தி, பாலஅம்மை நாடாத்தி, பேச்சிமுத்து, துரையப்பன், துரைப்பாண்டி, அருணாச்சலம் நாடார் ஆகியோர் மேற்படி வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் அவர்களை சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. அது எங்கள் சொத்திற்கான வழக்கு ஆகும். தாவா சொத்து என் பெயரிலோ என் தந்தை பெயரிலோ பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணம் இல்லை என்றால் ஆம். அது பூர்விக பட்டாவழி சொத்தாகும்.

8. மனுதாரரின் தாத்தா துரைப்பாண்டி நாடாருக்கு நாராயண நாடார் என்ற ஒரு மகன் மட்டும் என்றால் ஆம் . ஒரு மகளும் உள்ளார். அவரது பெயர் அன்னலெட்சுமி. நான் தாக்கல் செய்துள்ள கணிணி பட்டாவில் அன்னலெட்சுமி பெயர் உள்ளது என்றால் அது மோசடியாக ஏற்படுத்தப்பட்டது. மனுதாரருக்கு அவரது தாயார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் குற்ற வழக்கு போட்டுள்ளேன். நான் கொடுத்த புகாரின் பேரில் 2014 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் ஆம். அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்தில் வில்லங்கம் உள்ள விபரம் தெரியும் என்றால் அதனால் தான் குற்ற வழக்கு போட்டுள்ளேன்.

9. மனுதாரரின் தாத்தா துரைப்பாண்டி நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிப்பதற்காக மோசடியாக 3 வழக்குகளில் துரைப்பாண்டி நாடாரின் வாரிசுகளை சேர்க்காமல் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நாராயண நாடார் எழுதி வைத்த உயிலில் கண்ட நபர்கள் மட்டும்தான் அதில் உள்ள சொத்துக்கு வாரிசுகள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும் என் தந்தைக்கும் எந்த உரிமையும்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.21 19:50:58 +0530

இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா வழக்கில் வழிகாட்டி மதிப்பீடு வைக்கவில்லை என்றால் என் தம்பியிடம் கிரையம் வாங்கிய ஆவணத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்துள்ளேன். அது பதிவு செய்யப்படாத கிரையம் என்றால் ஆம். வழிகாட்டி மதிப்பீடு வைத்தால் இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.21 19:51:03 +0530